WEB COPY



IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED: 05.12.2025

CORAM

THE HONOURABLE MR.JUSTICE **V. LAKSHMINARAYANAN**

**W.P.No.29266 of 2017**
**and**
**W.M.P. No.31535 of 2017**

1.K.Shenbagam
2.M.Veena .. Petitioners

vs

1.The Deputy Registrar of Co-operative Societies,
Tiruppur Circle, TCMS Buildings,
Palladam Road, Tiruppur – 641 604.

2.No.414 The Virumandampalayam Primary
Agricultural Cooperative Credit Society Ltd.,
rep. By its President,
Virumandampalayam – 638 812
Via Chengappalli, Tiruppur District.

3.P.Subramanian,
The President,
No.414 The Virumandampalayam Primary
Agricultural Cooperative Credit Society Ltd.,
Virumandampalayam – 638 812
Via Chengappalli, Tiruppur District. .. Respondents

Petition filed under Article 226 of the Constitution of India praying for the issuance of a writ of certiorarified mandamus to call for the entire records relating to the impugned notice and orders passed by the first respondent in his proceedings in C.E.P. No.1/2017-2018 & R.C.No.2914/2017/SF dated 14.10.2017 under



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



Sections 167(1) and (2) of said Act, 1983 and quash the same and consequently direct the first respondent to pay cost and compensation of Rs.1.00 lakh to the petitioners.

| | | |
|---|---|---|
| For Petitioners | : | No appearance |
| For Respondents | : | Mr.M.Muthusamy,<br>Government Advocate<br>for R1 and R2 |

**ORDER**

There is no representation for the petitioners today also.

2. Learned Government Advocate for respondents 1 and 2 has produced the instructions given by the Deputy Registrar of Co-operative Societies, Tiruppur. The same is scanned and extracted hereunder:



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



கூட்டுறவுத்துறை

International Year of Cooperatives 2025

அனுப்புநர்:
திருமதி.க.பிரபா,
கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர்,
திருப்பூர் சரகம்,
திருப்பூர்.

பெறுநர்:
சிறப்பு அரசு வழக்கறிஞர் (கூட்டுறவு),
மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம்,
சென்னை.

ந.க.எண்.2914/2017/சப1 நாள்: 02.12.2025

ஐயா,

பொருள் : நீதிப்பேராணை – நீதிப்பேராணை எண். 29266/2025- திருமதி.K.செண்பகம் மற்றும் செல்வி.வீணா ஆகியோர் துணைப்பதிவாளர், திருப்பூர் சரகத்திற்கு எதிராக வழக்கு தொடர்ந்தது – விவரம் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை : மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு நீதிப்பேராணை எண் 29266/2017 தொடர்பாக அரசு வழக்கறிஞர் தொலைபேசி செய்தி நாள் – 02.12.2025

********

திருமதி.K.செண்பகம் மற்றும் செல்வி.வீணா ஆகியோர் துணைப்பதிவாளர், திருப்பூர் சரகத்திற்கு எதிராக நீதிப்பேராணை எண். 29266/2017 –ன் படி வழக்கு தொடர்ந்துள்ளனர். மேற்படி வழக்கு குறித்த விவரங்கள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

கே.414 விருமாண்டம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் 2014–15 ஆம் ஆண்டின் இறுதி தணிக்கையின் அறிக்கையுடன் வரப்பெற்ற தணிஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கடுங்குறைகள் மற்றும் 01.04.2015 முதல் 26.04.2017 வரையிலான காலத்தில் சங்கத்தில் நடைபெற்றுள்ள முறைகேடுகள் குறித்து, திருப்பூர் சரக கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.713/2018/வே(2) நாள் 15.05.2018 ன் படி 1983–ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 81–ன் கீழ் விசாரணைக்கு ஆணையிடப்பட்டு, மேற்படி விசாரணையை மேற்கொள்ள, கூட்டுறவு சார்பதிவாளர்/கள அலுவலர், காங்கயம் அவர்களை விசாரணை அலுவலராக நியமித்து ஆணையிடப்பட்டது. விசாரணை முடித்து 16.08.2018 ல் விசாரணை அலுவலர் தனது தீர்வை அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

சட்டப்பிரிவு 81 விசாரணை நடைபெற்று வரும் காலத்தில் முறைகேடுகளுக்கு காரணமாக சங்கத்தின் செயலாளராக பணிபுரிந்து வந்த திருமதி.K.செண்பகம் என்பவருக்காக அவரது மகள் மு.வீணா என்பவரது சொத்தினை சட்டப்பிரிவு 167 (2) ன் கீழ் C.E.P.No.1/2017–2018 (R.C.No.2914/2017/SF) நாள்– 14.10.2017 –ன் படி தீர்ப்புக்கு முன் பற்றுகை செய்யப்பட்டு, குன்னத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 16.10.2017 ல் ஆவண



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



எண்.11/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து திருமதி.செண்பகம் மற்றும் செல்வி. வீணா ஆகியோர் நீதிப்பேராணை எண்.29266/2017 ன் படி வழக்கு தொடர்ந்தனர்.

இந்நிலையில் விசாரணை அலுவலரின் அறிக்கையில் கீழ்க்கண்டவாறு பல்வேறு இனங்களில் நிதியிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நிதியிழப்பு விவரம்

| இனம் | நிதியிழப்புகள் | பரிந்துரை செய்யப்பட்ட தொகை ரூ. | வசூல் ரூ. | நிலுவை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொண்ட கிடங்கு கட்டுமானத்தில் கூடுதல் செலவெழுதி நிதியிழப்பு | 1426535.00 | 1426535.00 | 0 |
| 2. | சங்கப் பணியாளர்களுக்கு பண்டிகை முன்பணம் வழங்கியதாக செலவெழுதி முறைகேடு மூலம் நிதியிழப்பு | 61000.00 | 61000.00 | 0 |
| 3. | உறுப்பினர்களின் காப்பீட்டுக் கட்டணத்தை காப்பீட்டு நிறுவனத்தில் செலுத்தியதாக பொய்யான செலவெழுதி முறைகேடு மூலம் நிதியிழப்பு | 68359.00 | 68359.00 | 0 |
| 4. | சங்கத்திற்கு பேனர்கள் கொள்முதல் செய்த வகையில் நிதியிழப்பு | 3300.00 | 0 | 3300.00 |
| 5. | பயிர்க்கடன் வழங்கியதில் உறுப்பினர்களுக்கு தொகை குறைத்து வழங்கியது | 17900.00 | 0 | 17900.00 |
| 6. | நிர்வாக அனுமதி இல்லாமல் தன்னிச்சையாக மகளிர் சிறு வணிகக் கடன் மற்றும் மாற்றுத் திறனாளிகள் கடன் வழங்கி நிதியிழப்பு | 290000.00 | 190546.00 | 99454.00 |
| 7. | சங்க துணைவிதிக்கு எதிராக செயல்எல்லைக்கு வெளியே வசிப்பவர்களுக்கு | 50000.00 | 23560.00 | 26440.00 |



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



| | | | | |
|---|---|---|---|---|
| | பிணையி கடன் வழங்கி நிதியிழப்பு | | | |
| 8. | மத்தியகாலக் கடன் வசூல் தொகையை கையாடல் கொண்டது (அசல் ரூ.65000/- மற்றும் வட்டி ரூ.26019/-) மூலம் நிதியிழப்பு | 91019.00 | 0 | 91019.00 |
| 9. | உறுப்பினர்கள் பயிர்க்கடனுக்கு வசூலான தொகைகளை தாமதமாக வரவு வைத்து தற்காலிக நிதியிழப்பு தொகை வட்டியிழப்பு | 1626.00 | 0 | 1626.00 |
| 10. | நிர்வாகக்குழு அனுமதியின்றி பங்குத் தொகை வாபஸ் செய்ததாக செலவெழுதி நிதியிழப்பு | 59500.00 | 0 | 59500.00 |
| 11. | வைப்புக் கடன்களில் வசூலான அசல் மற்றும் வட்டியினை வரவு வைக்காமல் ரொக்கக் கையாடல் | 56022.00 | 0 | 56022.00 |
| 12. | கே.சி.சி பயிர்க்கடன் வழங்கியதற்கு வட்டி வசூல் செய்யாமல் மீண்டும் பயிர்க்கடன் வழங்கிய வகையில் வட்டியிழப்பு | 21160.00 | 0 | 21160.00 |
| 13. | அலுவலகக் கட்டடத்தில் மழைநீர்த் தொட்டி கட்டியதாக பொய்யான செலவெழுதி நிதியிழப்பு | 22325.00 | 0 | 22325.00 |
| 14. | திரு.ஈஸ்வரமூர்த்தி என்பவருக்கு பயிர்க்கடன் வழங்கி வசூல் செய்த தொகை கால தாமதமாக வரவு வைத்ததால் ஏற்பட்ட வட்டி இழப்பு | 4599.00 | 0 | 4599.00 |
| 15. | போலியாக உறுப்பினர்கள் பெயரில் சேமிப்பு கணக்கு எழுதி மோசடியாக வரவு செலவு செய்யப்பட்டது வட்டி இழப்பு | 60654.00 | 60654.00 | 0 |
| | மொத்தம் | 2233999.00 | 1830654.00 | 403345.00 |



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

இதனடிப்படையில் சட்டப்பிரிவு 87-ன் கீழ் தண்டவழக்கு பதிவு செய்யப்பட்டு, தண்டவழக்கு விசாரணை நடைபெற்று திருப்பூர் சரக துணைப்பதிவாளர் அவர்களால் த.தீ.எண்.01/2019/சபா(ந.க.2847/2018/சபா) நாள்-23.04.2019 -ன் படி தண்ட தீர்வை ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி தண்ட தீர்வை ஆணையில் தண்டவழக்கு விசாரணை காலத்தில் கீழ்க்கண்டவாறு தொகைகள் வசூல் செய்யப்பட்டுள்ளதால் தண்டவழக்கு கைவிடப்படுவதாக ஆணை வழங்கப்பட்டுள்ளது.

| இனம் | நிதியிழப்புகள் | தொகை ரூ. | வசூல் விவரம் |
|---|---|---|---|
| 4. | சங்கத்திற்கு பேரங்கள் கொள்முதல் செய்த வகையில் நிதியிழப்பு | 3300.00 | செலுத்து சீட்டு எண்.12, நாள்-05.09.2018-ம் தேதியில் வட்டியுடன் செலுத்தப்பட்டுள்ளது. |
| 5. | பயிர்கடன் வழங்கியதில் உறுப்பினர்களுக்கு தொகை குறைத்து வழங்கியது | 17900.00 | 29.11.2018 ம் தேதியில் வட்டியுடன் செலுத்தப்பட்டுள்ளது. |
| 6. | நிர்வாக அனுமதி இல்லாமல் தன்னிச்சையாக மகளிர் சிறு வணிகக் கடன் மற்றும் மாற்றுத் திறனாளிகள் கடன் வழங்கி நிதியிழப்பு | 99454.00 | 30.07.18, 18.07.18, 17.08.18, 22.01.19, 22.04.19, 23.04.19 தேதிகளில் வட்டியுடன் செலுத்தப்பட்டுள்ளது. |
| 7. | சங்க துணைவிதிக்கு எதிராக செயல்எல்லைக்கு வெளியே வசிப்பவர்களுக்கு பிணையி கடன் வழங்கி நிதியிழப்பு | 26440.00 | 17.08.2017 மற்றும் 22.04.2019 தேதிகளில் வட்டியுடன் செலுத்தப்பட்டுள்ளது. |
| 8. | மத்தியகாலக் கடன் வசூல் தொகையை கையாடல் செய்தது (அசல் ரூ.65000/- மற்றும் வட்டி ரூ.26019/-) மூலம் நிதியிழப்பு | 91019.00 | 17.08.2018 தேதியில் வட்டியுடன் செலுத்தப்பட்டுள்ளது. |
| 9. | உறுப்பினர்கள் பயிர்க்கடனுக்கு வசூலான தொகைகளை தாமதமாக வரவு வைத்து தற்காலிக | 1626.00 | 17.08.2018 தேதியில் வட்டியுடன் செலுத்தப்பட்டுள்ளது. |



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



| | | | |
|---|---|---|---|
| | நிதியிழப்பு தொகை வட்டியிழப்பு | | |
| 10. | நிர்வாகக்குழு அனுமதியில்லாமல் பங்குத் தொகை லாபம் செய்ததாக செலவெழுதி நிதியிழப்பு | 59500.00 | 9 உறுப்பினர்களின் பங்கு தொகை லாபம் தொடர்பாக நேரடி விசாரணை மற்றும் ஆவணங்கள் பரிசீலணையில் ஒரு உறுப்பினருக்கு உரிய லாபம் பங்குத் தொகை ரூ.9400/- 05.09.2018-ம் நாள் செலுத்தப்பட்டு நேர் செய்யப்பட்டுள்ளது. மீதி 8 உறுப்பினர்களுக்குரிய பங்கு தொகை லாபம் தொடர்பாக சங்கத்தில் பின்னேற்பு தீர்மானம் இயற்றி சரிசெய்து கொள்ள வேண்டும். 8 உறுப்பினர்களுக்கான ரூ.50100/- பங்கு லாபம் தொடர்பான செலவு சீட்டுகளில் உரிய கையொப்பங்கள் உள்ளன. சங்கத்திற்கு நிதியிழப்பு ஏதும் இல்லை. |
| 11. | வைப்புக் கடன்களில் வசூலான அசல் மற்றும் வட்டியினை வரவு வைக்காமல் ரொக்கக் கையாடல் | 56022.00 | 05.09.2018 தேதியில் வட்டியுடன் செலுத்தப்பட்டுள்ளது. |
| 12. | கே.சி.சி பயிர்க்கடன் வழங்கியது வட்டி வசூல் செய்யாமல் மீண்டும் பயிர்க்கடன் வழங்கிய வகையில் வட்டியிழப்பு | 21160.00 | 24.07.18, 17.08.2018, 05.09.2018, 29.11.2018 தேதிகளில் வட்டியுடன் செலுத்தப்பட்டுள்ளது. |
| 13. | அலுவலகக் கட்டடத்தில் மழைநீர்த் தொட்டி கட்டியதாக பொய்யான செலவெழுதி நிதியிழப்பு | 22325.00 | தண்ட வழக்கு விசாரணையில் சங்கத்தில் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்ததில் சங்கத்தில் மூன்று தலைப்புகளில் அதாவது மழைநீர்த் தொட்டி கட்டிய வகையில் செலவு ரூ.12120/- கட்டிட திறப்பு விழா செலவு ரூ.8955/- மற்றும் பயணப்படி |



https://www.mhc.tn.gov.in/judis

| | | | |
|---|---|---|---|
| | நிதியிழப்பு தொகை கட்டியிழப்பு | | |
| 10. | நிர்வாகக்குழு அனுமதியின்றி பங்குத் தொகை வாபஸ் செய்ததாக செலவெழுதி நிதியிழப்பு | 59500.00 | 9 உறுப்பினர்களின் பங்கு தொகை வாபஸ் தொடர்பாக நேரடி விசாரணை மற்றும் ஆவணங்கள் பரிசீலனையில் ஒரு உறுப்பினருக்கு உரிய வாபஸ் பங்குத் தொகை ரூ.9400/- 05.09.2018-ம் நாள் செலுத்தப்பட்டு நேர் செய்யப்பட்டுள்ளது. மீதி 8 உறுப்பினர்களுக்குரிய பங்கு தொகை வாபஸ் தொடர்பாக சங்கத்தில் பின்னேற்பு தீர்மானம் இயற்றி சரிசெய்து கொள்ள வேண்டும். 8 உறுப்பினர்களுக்கான ரூ.50100/- பங்கு வாபஸ் தொடர்பான செலவு சீட்டுகளில் உரிய கையொப்பங்கள் உள்ளன. சங்கத்திற்கு நிதியிழப்பு ஏதும் இல்லை. |
| 11. | வைப்புக் கடன்களில் வசூலான அசல் மற்றும் வட்டியினை வரவு வைக்காமல் தொகைக் கையாடல் | 56022.00 | 05.09.2018 தேதியில் வட்டியுடன் செலுத்தப்பட்டுள்ளது. |
| 12. | கே.சி.சி பயிர்க்கடன் வழங்கியது வட்டி வசூல் செய்யாமல் மீண்டும் பயிர்க்கடன் வழங்கிய வகையில் வட்டியிழப்பு | 21160.00 | 24.07.18, 17.08.2018, 05.09.2018, 29.11.2018 தேதிகளில் வட்டியுடன் செலுத்தப்பட்டுள்ளது. |
| 13. | அலுவலகக் கட்டிடத்தில் மழைநீர்த் தொட்டி கட்டியதாக பொய்யான செலவெழுதி நிதியிழப்பு | 22325.00 | தண்ட வழக்கு விசாரணையில் சங்கத்தில் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்ததில் சங்கத்தில் மூன்று தலைப்புகளில் அதாவது மழைநீர்த் தொட்டி கட்டிய வகையில் செலவு ரூ.12120/- கட்டிட திறப்பு விழா செலவு ரூ.8955/- மற்றும் பயணப்படி |



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



| | | | |
|---|---|---|---|
| | | | தலைப்பில் தேர்தல் அலுவலருக்கு வழங்கிய பயணப்படி தொகை ரூ.1250/- என மூன்று தலைப்புகளில் கணக்குகள் எழுதப்பட வேண்டும். நிதியிழப்பு ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. |
| 14. | திரு.சங்கரமூர்த்தி என்பவருக்கு பயிர்க்கடன் வழங்கி வசூல் செய்த தொகை கால தாமதமாக வரவு வைத்ததால் ஏற்பட்ட வட்டி இழப்பு | 4599.00 | 05.09.2018 தேதியில் வட்டியுடன் செலுத்தப்பட்டுள்ளது. |
| | மொத்தம் | 403345.00 | |

மேற்படி தண்டத்தீர்வை தொகை முழுவதும் வசூல் செய்யப்பட்ட படியால் சட்டப்பிரிவு 167(2)-ன் கீழான நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டது.

சங்க முறைகேடுகளுக்காக திருமதி.செண்பகம் செயலாளர் 09.06.2017 ல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார். முறைகேட்டு தொகை முழுவதும் வசூலிக்கப்பட்டு, தண்டத்தீர்வை நடவடிக்கை கைவிடப்பட்டதால் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட திருமதி.செண்பகம் செயலாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கை முடிவு கட்டப்பட்டதன் பேரில், இவரது தற்காலிக பணிநீக்கத்தினை முடிவு செய்து ஊழியர் ஆக [illegible] சங்கத் தலைவரால் ஆணை வழங்கப்பட்டதன் அடிப்படையில், சங்கத் தலைவர் நடவடிக்கை நாள் 21.02.2020 மற்றும் சங்க தீர்மானம் எண் 1 நாள் - 20.02.2020 ன் படி மீண்டும் பணி நியமனம் செய்யப்பட்டு நாளது வரை பணிபுரிந்து வருகிறார் என்ற விவரத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்படி சங்கத்தின் நிதியிழப்பு தொகை முழுவதும் வசூல் செய்யப்பட்டு, சட்டப்பூர்வ நடவடிக்கைகள் அனைத்தும் முடிவு கட்டப்பட்டுள்ளதால் இவ்வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

துணைப்பதிவாளர்,
கூட்டுறவு சங்கங்களின்
துணைப்பதிவாளர் அலுவலகம்,
திருப்பூர்.

3. In terms of the proceedings, the Deputy Registrar has informed that the entire amount due to the co-operative society has




https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



been recovered and consequently the execution petition itself came to be dismissed. It is further pointed out that the first writ petitioner was reinstated in service on 21.02.2020 as is clear from the proceedings passed across the bar. The said proceedings dated 21.02.2020 is scanned and extracted hereunder:





https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



4. In view of the above, nothing remains to be considered in this writ petition and the same is dismissed. Consequently, connected miscellaneous petition is closed. There shall be no order as to costs.

05.12.2025

Index:Yes/No
Neutral Citation:Yes/No
mmi

To

1.The Deputy Registrar of Co-operative Societies,
Tiruppur Circle, TCMS Buildings,
Palladam Road, Tiruppur – 641 604.

2.No.414 The Virumandampalayam Primary
Agricultural Cooperative Credit Society Ltd.,
rep. By its President,
Virumandampalayam – 638 812
Via Chengappalli, Tiruppur District.,
Namakkal District.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**V. LAKSHMINARAYANAN,J.**

mmi

W.P. No.29266 of 2017

05.12.2025



https://www.mhc.tn.gov.in/judis